நிபந்தனையின் பேரில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீதி 4 பேர் தலைமறைவாக உள்ளனர். சிறு காயமேற்பட்ட மாணவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி தொடர்பாக, அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 83-81, இ.த.ச. 147, 148, 323, 324, 427 மற்றும் 307பிரிவு களின்கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

இறுதியாண்டு பொறியியல் கல்லூரி விடுதி மாணவர்களைத் தவிர மற்ற பொறியியல் மாணவர்கள் விடுதிகள் மூடப் பட்டுள்ளன.

[முற்பகல் 10.00]

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு 27—4—1981 முதல் வகுப்புகள் அமைதியாக நடைபெற்று வருகின்றன. காவல் துறையினரின் தகுந்த உடனடித் தலையீட்டினால் நிலைமை உடன் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தற்போது அங்கு நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இப்பிரச்சினை குறித்து விவாதிக்க, சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

கவன ஈர்ப்புகள்.

அ. புவனகிரி தொகுதி, வீரமுடையான் நத்தம் கிராமத்தில் தீ விபத்து.

திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ''புவனகிரி தொகுதி வீரமுடையான் நத்தம் கிராமத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர்களுக்குக் கூட்டுறவுக் கடன் பெற நிலப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்து ஏற்பட்டவுடன் பாதிக்கப்பட்ட குடிசை வாழ்மக்களுக்கு வழக்கம்போல் அரசின் உத்தரவுப்படி ரூ. 200 கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வேஷ்டி, சேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஐந்து கிலோ அரிசி கொடுக்கப் பட்டு இருக்கிறது. அரசு இன்றைக்குப் போட்டிருக்கும் உத்தர

வுப்படி ஆதி திராவிட மக்களுக்கு ரூ. 2,000 வீடு கட்டிக்கொள்வதற்காக வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது. இதை இந்த அரசு முறையாகச் செய்யும்.

திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அங்கு, அந்தத் தீ விபத்து நடைபெற்ற இடத்தில் சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்தும், அந்த இடம் நத்தம் புறம்போக்காக இருந்தும் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுக்காத காரணத்தால் கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கத்திலிருந்து அமைச்சர் அவர்கள் அறிவித்த மாதிரி 2,000 ரூபாய் கடன் பெற முடியவில்லை. ஆகையால் உடனடியாக அந்த ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஆதி திராவிட மக்கள் குடியிருந்த அந்த இடம் அவர்களுக்குச் சொந்தமான நிலம் இல்லை என்பது இப்போதுதான் அரசின் கவனத்திற்கு, அதாவது இந்தத் தீ விபத்து ஏற்பட்ட பிறகு, கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் 15, 20 ஆண்டுகளாகக் குடியிருப்பதாகச் சொன்னார்கள். அந்த விவரம் தெரிந்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகப் பட்டா கொடுக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு இந்த 2,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது விரைவிலே நடைபெறும்.

திரு வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அடிக்கடி குடிசைப் பகுதிகள் தீ விபத்துக்கு ஆளாவதால், இப்படிப்பட்ட கூரை வீடுகள் தீ விபத்தால் பாதிக்காத அளவுக்குக் கூரை வீடு கட்ட உபயோகப்படும் வைக்கோல், வேழல், கரும்புத் தோகை போன்றவைகள் மீது கூரை போடுவதற்கு முன்னால், அவைகள் மீது இரசாயனப் பொருள்களைத் தெளித்துப் பயன்படுத்தினால் தீ பிடிக்காது என்று புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த மேற்படி கூரைவீடுகள் போடும்போது பயன்படுத்தப்படும் பொருள்களை இரசாயனத் திராவகத்தில் நனைக்கவோ, அல்லது அவைகளின் மீது 'ஸ்ப்ரே' செய்யவோ அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட விவரங்கள் இதற்கு முன்னால் எனக்குத் தெரியாது. ஆனால் கூரைமீது இரசாயனப் பொருள்களை நனைத்துக் கட்டுகிறபோது தீப் பிடிக்காது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பது தெரியாது. இருந்தாலும் அது பற்றிய முழு விவரத்தையும் சொன்னால் அரசு அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS